<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **CP.No.** | **:** | 115/2024 | சாட்சியம் | **:** | **PW1** |
| **Name** | **:** | திரு.மணிகண்டன் | | | |
| **Date** | **:** | **09.09.2025** | | | |
| **Time** | **:** | **11.28 a.m to 11.43 a.m** | | | |

<u>ம.த.சா.**1.**திரு.மணிகண்டன் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

தொழிலாளர் துணை ஆணையர் அவர்கள் என்னுடன் சேர்த்து வேறு சில தொழிலாளர்களையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என சொன்னதன் பேரில் நிர்வாகம் பணி நிரந்தரம் செய்தது என்றால் இல்லை. என்னை நிரந்தரம் செய்யாதது சம்பந்தமாக நான் வழக்கு எதுவும் போட்டேனா என்றால் இல்லை. இன்றைய தேதியில் நான் நிரந்தர தொழிலாளி என்றால் ஆமாம். நான் உள்பட 2022-ல் நிரந்தரம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு 2022-ல் இருந்து தான் நிரந்தர தொழிலாளர்களுக்கான சம்பளம் வழங்கப்பட்டது என்றாலும் முன் தேதியிட்டு எந்த தொழிலாளருக்கும் வழங்கப்படவில்லை என்றாலும் தெரியாது. ராஜேஷ், அரவிந்த ராஜ் ஆகியோரை பற்றி என்னுடைய பிரமாண வாக்கு மூலத்தில் சொல்லி உள்ளேன் அவர்கள் இருவரும் தற்சமயம் கம்பெனியில் வேலை பார்த்து வருகிறார்கள். ராஜேஷ் மற்றும் அரவிந்த ராஜ்

எந்த தேதியில் பணி நிரந்தரம் செய்யப்பட்டார்களோ அந்த தேதியில் இருந்து தான் அவர்களுக்கு நிரந்தர பணியாளருக்கான சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது என்றாலும் முன் தேதியிட்டு வழங்கப்படவில்லை என்றாலும் தெரியாது. நிரந்தரம் செய்யப்பட்ட எந்த தொழிலாளர்களுக்கும் முன் தேதியிட்டு சம்பளம் வழங்கப்படவில்லை என்றாலும் எந்த தேதியில் நிரந்தரம் செய்யப்பட்டார்களோ அந்த தேதியில் இருந்து தான் நிரந்தர தொழிலாளர்களுக்கான சம்பளம் வழங்கப்பட்டது என்றாலும் எனவே என்னுடைய கோரிக்கை நிலைக்கதக்கது அல்ல என்றாலும் சரியல்ல. என்னுடைய மனுவின் எந்த ஆதாரத்தின் அடிப்படையில் அந்த தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என சொல்லி உள்ளேனா என்றால் சம வேலை சம ஊதியம் என்ற அடிப்படையில் கணக்கிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பெருமாள் என்பவர் என்னுடன் வேலைக்கு சேர்ந்தவரின் சம்பளத்தை ஒப்பிட்டு தான் இந்த தொகை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பெருமாள் சம்மந்தப்பட்ட சம்பள ரசீது தாக்கல் செய்துள்ளேன். பெருமாள் எந்த தேதியில் நிரந்தரம் செய்யப்பட்டார் என தெரியாது. பெருமாள் என்னை விட முன்பு வேலைக்கு சேர்ந்தவர் என்றால் இல்லை ஒரே தேதியில் தான் வேலைக்கு சேர்ந்தோம்.

மறு விசாரணை இல்லை.

S SUJATHA
Presiding Officer, Labour Court
Digitally signed by S SUJATHA
Location: Kancheepuram
Date: 2025.09.10 09:56:02 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:09.09.2025.